**Mississauga வில் பட்டாசுகளைப் பயன்படுத்துவது பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்து விஷயங்கள்**

பட்டாசு கொளுத்துவதை விரும்புகிறீர்களா? விதிகளை மதித்து, பட்டாசுகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதை நினைவில் கொள்ளுங்கள்.

கொண்டாட்டங்கள் என்றாலே, பல தசாப்தங்களாக பட்டாசுகள் அவற்றில் ஒரு முக்கிய அங்கமாக இருந்து வருகின்றன; இப்படியான, சிறப்பு சந்தர்ப்பங்களில் இரவு வானத்தை அவை ஒளிரச் செய்கின்றன. விடுமுறைக்காகவோ, கொண்டாட்டத்திற்காகவோ, அல்லது மதரீதியான அல்லது கலாச்சார நிகழ்வு அல்லது பிற காரணங்களுக்காகவோ, இவை பிரகாசமான விளக்குகளாக, அழகான வண்ணங்களாக மற்றும் ஒலிகளாக பழமையான நினைவுகளைத் தூண்டுகின்றன.

இருப்பினும், "பட்டாசு" என்ற வார்த்தையில் "நெருப்பு" என்ற வார்த்தையும் அடங்கும் என்று எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? ஏனென்றால், அவற்றை முறையாகவோ அல்லது பாதுகாப்பாகவோ பயன்படுத்தாவிட்டால் தீ விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது.

Mississauga வில், பட்டாசுகளின் பயன்பாடு என்பது அவற்றின் மீதான துணைச் சட்டங்கள், விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களால் கட்டுப்படுத்தப்பட்டு, சமூகத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் மகிழ்ச்சியை உறுதி செய்கிறது.

பட்டாசுகள் என்றால் என்ன, அவற்றை எப்படி, எப்போது பயன்படுத்தலாம், அவற்றின் பயன்பாட்டைச் சுற்றியுள்ள சட்டப்பூர்வ பரிசீலனைகள் ஆகியவற்றை அனைத்து குடியிருப்பாளர்களும் புரிந்துகொள்வது முக்கியம். உங்களுக்கும் உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பாதுகாப்பை முன்னுரிமையாகக் கொள்வதை நினைவில் வையுங்கள்.



**பட்டாசுகள் என்றால் என்ன?**

அழகியல் மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்ட வானவேடிக்கை மற்றும் வெடிக்கும் சாதனங்களே பட்டாசுகள் ஆகும். எரிதல், வெடித்தல் அல்லது இரண்டின் கலவையின் மூலம் காட்சி மற்றும் செவிப்புலன் உணரும்படியான நல்ல விளைவுகளை உருவாக்கும் வகையில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை பல்வேறு வடிவங்கள், அளவுகள் மற்றும் விளைவுகள் தரும் வகையில் வருகின்றன, பெரும்பாலும் மிளிரும் வண்ணங்கள் மற்றும் நுண்ணிய வடிவங்களைக் கொண்டுள்ளன.

நேஷனல் ரிசோர்சஸ் கனடா அமைப்பின் படி பட்டாசுகளை இரண்டு வகைகளாக வகைப்படுத்தலாம்.

**நுகர்வோர் பட்டாசுகள்**

நுகர்வோர் பட்டாசுகள் திறந்தவெளியில் கண்டுமகிழ்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன, மேலும் பொதுமக்கள் அவற்றைப் பயன்படுத்தலாம். இருப்பினும், அவற்றைப் பின்பற்ற வேண்டிய சில விதிமுறைகளுடன் அவை வருகின்றன. அவற்றில் ரோமன் மெழுகுவர்த்திகள், புஸ்வாணங்கள், சக்கரங்கள், மத்தாப்புக்கள் மற்றும் சரவெடிகள் ஆகியவை அடங்கும். மேலும் அறிவதற்கு காணவும்: வெடிபொருட்களுக்கான விதிமுறைகள்.

**புதுமையான பட்டாசுகள்**

மத்தாப்புக்கள் போன்ற புதுமையான சாதனங்கள் பெரும்பாலும் அந்தந்த வகையைப் பொறுத்து, திறந்தவெளிகளில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த பட்டாசுகளில் சிறிய அளவிலான வாணவேடிக்கைக்கான வெடிமருந்துக் கலவை உள்ளது.

மேலும் அறிவதற்கு காணவும்: வெடிபொருட்களுக்கான விதிமுறைகள்.



**Mississauga வில் பட்டாசுகள்**

Mississauga வில், வாணவேடிக்கைகள் பொதுவாக கனடா தினம், புத்தாண்டுக் கொண்டாட்டம் மற்றும் திருமணங்கள் மற்றும் பிறந்தநாள் போன்ற பிற குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுடன் தொடர்புடையவை.

குடியிருப்பாளர்கள் பட்டாசுகளைப் பயன்படுத்துவது சட்டப்பூர்வமானது என்றாலும், நகரத்தில் பல விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.

பட்டாசுகளைப் பயன்படுத்துவதற்கான குறிப்பிட்ட நேரங்கள் எவை என, நகர நிர்வாகம் தெளிவாகத் தகவல் தெரிவிக்கிறது, இதனால் மக்கள் அதற்கேற்ப தயாராகலாம்.

**நகரம் ஏன் பட்டாசுகளை அனுமதிக்கிறது? ஏன் விதிகள் உள்ளன?**

கலாச்சார அடையாளத்தைப் பாதுகாப்பதிலும், மத மரபுகளைக் கொண்டாடுவதிலும், பகிரப்பட்ட அனுபவங்கள் மூலம் சமூகங்களை ஒன்றிணைப்பதிலும் பட்டாசுகள் பங்கு வகிப்பதால், குடியிருப்பாளர்கள் பட்டாசுகளைப் பயன்படுத்த நகர நிர்வாகம் அனுமதிக்கிறது.

Mississauga குடியிருப்பாளர்கள் பலருக்கு, பட்டாசுகள் வெறும் பொழுதுபோக்கு என்பதை விட சற்று அதிக அர்த்தமுள்ள சின்னங்களாக இருக்கலாம். மகிழ்ச்சியான தருணங்களை அல்லது வரலாற்று நிகழ்வுகளைக் குறிக்க அவற்றைப் பயன்படுத்தலாம். மக்கள் தங்கள் பாரம்பரியம், ஆன்மீக நம்பிக்கைகளுடன் இணைவதற்கும், பிரமிப்பு, ஒற்றுமை மற்றும் பெருமை உணர்வுடன் கொண்டாடுவதற்கும் பட்டாசுகள் உதவுகின்றன.

நகரத்தின் துணைச் சட்டங்களால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்குள் பட்டாசுகளை அனுமதிப்பது, நமது நகரத்தின் பன்முக கலாச்சார அமைப்பை மதிக்கிறது, அதே நேரத்தில் பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சமூக நல்வாழ்வை முன்னெடுக்கிறது. இது சமூக உறவுகளை வலுப்படுத்த உதவுகிறது, ஆனால் செல்லப்பிராணிகள், வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் உட்பட நம்மைச் சுற்றியுள்ளவர்கள் மீது பட்டாசுகள் ஏற்படுத்தக்கூடிய மனஅழுத்தத்தின் அளவையும் கட்டுப்படுத்துகிறது. எல்லாமாகச் சேர்த்துப் பார்த்தால், இது நமது நகரத்தில் அனைவரையும் உள்ளடக்கியதாகவும், துடிப்பானதாகவும், Mississauga வை தாயகமாகக் கொண்ட குடியிருப்பாளர்களைப் பிரதிபலிக்கும் விதமாகவும் ஆக்குகிறது.



**கொண்டாட்டங்களுக்கான பட்டாசுகள்**

ஒவ்வொரு ஆண்டும், ஐந்து குறிப்பிட்ட கொண்டாட்டங்களில், குடியிருப்பாளர்கள் தமக்குச் சொந்தமான தனிப்பட்ட கட்டிடங்களில் பட்டாசுகளைப் பயன்படுத்த நகரத்தின் அனுமதி தேவையில்லை. மிஸ்ஸிஸ்ஸாகாவின் பட்டாசு உரிமம் மற்றும் பயன்பாட்டு துணைச் சட்டம் என்பது, Mississauga வில் பட்டாசுகளைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்துகிறது. தற்போதைய துணைச் சட்டம் குடியிருப்பாளர்கள் தங்கள் தனிப்பட்ட சொத்தில், அந்தி சாயும் நேரம் முதல் இரவு 11 மணி வரை அவரவர் வீட்டில் பட்டாசுகளைப் பயன்படுத்த அனுமதிக்கிறது:

- சந்திர புத்தாண்டு
- விக்டோரியா தினம்
- கனடா தினம்
- தீபாவளி
- புத்தாண்டு தினம் (மாலை மங்கும் நேரம் முதல் அதிகாலை 1 மணி வரை)

Mississauga நகரம் கனடா தினம் மற்றும் புத்தாண்டு தின நிகழ்வுகளை பொதுமக்களுக்கான வானவேடிக்கைகளாக தங்கள் நிதி உபசரிப்புடன் நடத்துகிறது, இது அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் மகிழ்ச்சிகரமான அனுபவத்தை உறுதி செய்கிறது.

**பட்டாசுகளைப் பயன்படுத்துதல்**

பட்டாசுகளை பெரியவர்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும். நுகர்வோருக்கான பட்டாசுகளை வாங்க, சேமிக்க மற்றும் பயன்படுத்த உங்களுக்கு குறைந்தது 18 வயது இருக்க வேண்டும். நீங்கள் பட்டாசுகளைப் பயன்படுத்த விரும்பினால், அவற்றை வாங்குவதற்கு முன் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய சில விஷயங்கள் உள்ளன.

1. கூட்டாட்சி சட்டங்கள் மற்றும் நகராட்சி துணைச் சட்டங்களைப் (எ.கா., Mississauga நகரத்தின் பட்டாசு உரிமம் மற்றும் பயன்பாட்டு துணைச் சட்டம்) புரிந்துகொள்ள நேரம் ஒதுக்குங்கள்.
2. உங்களுக்கு அனுமதி தேவைப்படுமா, அதற்கு எப்படி விண்ணப்பிப்பது போன்ற கட்டுப்பாடுகள் பற்றி மேலும் அறிக.

3. Mississauga வில் எங்கு, எப்போது பட்டாசுகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
4. ஒரு புகழ்பெற்ற விற்பனையாளரிடமிருந்து மட்டுமே பட்டாசுகளை வாங்கவும். Mississauga வில் பட்டாசுகளை விற்கக்கூடியவர்களுக்கு நகர நிர்வாகம் உரிமம் வழங்கியுள்ளது.
5. Mississauga வில் தீப்பற்றவைப்பதற்கான ஏதேனும்  தடைகள் உள்ளனவா என்பதை எப்போதும் சரிபார்க்கவும். பட்டாசுகள் வெப்பமான மற்றும் வறண்ட காலநிலையில் தீப்பிடித்தலை ஏற்படுத்தக்கூடிய தீப்பொறிகளை உருவாக்குகின்றன, மேலும் அவை தீப்பற்றவைப்பதற்கான தடையில் சேர்க்கப்படலாம்.
6. நகரத்தின் துணைச் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட நேரத்திற்குள் பட்டாசுகளைப் பயன்படுத்த நினைவில் கொள்ளுங்கள்.
7. முதியவர்கள், குழந்தைகள், செல்லப்பிராணிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட உங்கள் அண்டை வீட்டாரிடம் கரிசனத்துடன் இருங்கள்.




**உரிம அனுமதிகள்**

அனுமதிக்கப்பட்ட நாட்களைத் தவிர வேறு எந்த நாளிலும் தனியார் சொத்துக்களில் பட்டாசு வெடிக்க விரும்பினால், குடியிருப்பாளர்கள் [பட்டாசு கொளுத்துவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்](). இந்த அனுமதிகள் Mississauga தீயணைப்பு மற்றும்

அவசர சேவைகள் (MFES) ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நகர பூங்காக்களில் கூட பட்டாசுகளைப் பயன்படுத்த நகரத்தின் அனுமதி தேவை. இது போன்ற பொதுமக்கள் நடமாடும் வீதிகளில் பட்டாசு வெடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

**பட்டாசு வாங்குதல்**

பட்டாசுகளை வாங்குவது பெரும்பாலும் விடுமுறை நாட்கள் அல்லது முக்கிய கலாச்சார அல்லது மத கொண்டாட்டங்களின் போது நடக்கும். கூட்டமைப்பு மற்றும் நகராட்சி விதிமுறைகளை கடைபிடிக்கும் உரிமம் பெற்ற மற்றும் புகழ்பெற்ற கடைகளில் இருந்து மட்டுமே பட்டாசுகள் வாங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். சட்டவிரோத வெடிபொருட்கள், மற்றும் பட்டாசுகளைத் தவிர்க்கவும். நீங்களேயும் தயாரிக்க முயற்சிக்காதீர்கள்.

**பட்டாசுகளை போக்குவரத்து செய்வதும் சேமித்து வைப்பதும்**

பட்டாசுகளை போக்குவரத்து செய்யும்போது அவை சேதமடையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குழந்தைகள் அவற்றை அணுக முடியாத அளவுக்கு பாதுகாப்பான முறையில் அவற்றை சேமித்து வைப்பதை உறுதி செய்யுங்கள். வெப்பமூட்டும் ஆதாரங்கள், எரியக்கூடிய பொருட்கள் ஆகியவற்றிலிருந்து அவற்றை விலக்கி வைத்து, திறந்தவெளியில் மட்டுமே பயன்படுத்தவும்.

**பட்டாசு வெடித்தல்**

பட்டாசுகளைக் கையாளும் போதும் வெடிக்கும் போதும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். கனடா பாதுகாப்பு கவுன்சிலின் சில குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

- கூட்டாட்சி சட்டங்கள் மற்றும் நகர துணைச் சட்டங்களைப் பற்றி நன்கு அறிந்து கொள்வதன் மூலம் விதிகளை அறிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் வாங்கிய ஒவ்வொரு பட்டாசிலும் உள்ள வழிகாட்டுமுறைகள், எச்சரிக்கைகள் மற்றும் எச்சரிக்கை லேபிள்களைப் படியுங்கள்.
- தனியார் சொத்தில் திறந்தவெளியில் தெளிவான இடங்களை அமைத்துக்கொள்ளவும். வீடுகள், வாகனங்கள், மரங்கள், தலைக்குமேல் செல்லும் கம்பிகள் மற்றும் எரியக்கூடிய பொருட்களிலிருந்து விலக்கி வைத்தே

பட்டாசுகளைப் பயன்படுத்தவும். ஸ்திரத்தன்மைக்காக, கடினமான, தட்டையான மற்றும் சமமான மேற்பரப்பில் பட்டாசுகளை கொளுத்தவும்.

- குழந்தைகளை பட்டாசுகள் எரியும் இடத்திலிருந்து பாதுகாப்பான தூரத்தில், தள்ளியே இருக்க வைக்கவும். காற்று வீசும்போது, அது பார்வையாளர்களை நோக்கி அல்லாமல் அவர்களை விட்டு விலகி வீசுகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- பார்வையாளர்கள் பட்டாசு கொளுத்தப்படும் பகுதியிலிருந்து தூரமாக விலகி இருக்க வேண்டும். பட்டாசு லேபிளில் எழுதப்பட்ட பாதுகாப்பு தூரத்தை சரிபார்க்கவும்.
- பட்டாசுகளை கையாளும் போது பாதுகாப்பு கண்ணாடிகள் மற்றும் கையுறைகளை அணியுங்கள். கைக்கெட்டும் தூரத்தில் பட்டாசுகளைப் பற்றவைத்துவிட்டு, பின்னர் தூரமாகச் சென்றுவிடவும்.
- பட்டாசுகளை நோக்கி ஒருபோதும் சாயாதீர்கள். தலைமுடியை மற்றும் துணிகளை நெருப்பு எரியும் இடங்களிலிருந்து விலக்கி வைக்கவும்.
- அவிழ்ந்துவிட்ட அல்லது பழுதடைந்த பட்டாசுகளை பற்றவைக்க முயற்சிக்காதீர்கள்.
- பற்றவைக்கப்பட்ட பட்டாசுகளை ஒருபோதும் கையில் வைத்திருக்க வேண்டாம்.
- பட்டாசுகள் பழுதடையும் அபாயத்தைக் குறைக்க, பட்டாசுகளை ஒவ்வொன்றாக கொளுத்தவும்.
- அருகில் ஒரு வாளி மணல், தண்ணீர் கிடைக்கும் வசதி மற்றும் வேலை செய்யக்கூடிய தீயணைக்கும் கருவியை வைத்திருங்கள்.

**பட்டாசுகளை அப்புறப்படுத்துதல்**

பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத பட்டாசுகளை அப்புறப்படுத்த, பட்டாசுகளை முழுவதுமாக தண்ணீரில் மூழ்கடித்து இரவு முழுவதும் ஊற வைக்கவும். ஊறவைத்த பட்டாசுகள் வறண்டு போகாமல் இருக்க ஒரு பிளாஸ்டிக் பையில் சுற்றி உங்கள் குப்பை கூடையில் எறியுங்கள்.

நீங்கள் பட்டாசுகளைப் பயன்படுத்திய பகுதியை சுத்தம் செய்ய மறக்காதீர்கள். மீதமுள்ள குப்பைகள், உறைகள், பேக்கேஜிங் பொருட்களை அகற்றி உங்கள் குப்பைக் கூடையில் எறியுங்கள்.



**சப்த அளவுகள் மற்றும் செல்லப்பிராணிகள்**

பட்டாசுகள் சப்தமாகவும் இரைச்சலாகவும் இருக்கும். உரத்த சத்தங்கள் செல்லப்பிராணிகளுக்கு மன அழுத்தத்தையும், சில குடியிருப்பாளர்களுக்கு தொந்தரவையும் ஏற்படுத்தும். இப்படியான தாக்கத்தைக் குறைக்க, செல்லப்பிராணி உரிமையாளர்கள், உச்சகட்ட பட்டாசு வெடிக்கும் நேரங்களில் விலங்குகளை வீட்டிற்குள் வைத்திருப்பது, அமைதியான மற்றும் வசதியான இடத்தை உருவாக்குவது மற்றும் அவற்றை அமைதியாக வைத்திருக்க உதவும் நிசப்தத்திற்கான நுட்பங்கள் அல்லது இசையைப் பயன்படுத்துவது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கலாம்.

சப்தத்திற்கு கூசும் உணர்திறன் உள்ள குடியிருப்பாளர்கள் காதில் செருகிக்கொள்ளும் கருவிகள், ஒலி தடுக்கும் சாதனங்கள் அல்லது அதிக செயல்பாடு உள்ள பட்டாசு பகுதிகளிலிருந்து தூரமான இடங்களுக்குச் சென்று நேரத்தை அமைதியாகக் கழிக்கத் திட்டமிடலாம்.

**உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் பட்டாசுகளைப் பயன்படுத்தினால்**

Mississauga அனைவரையும் உள்ளடக்கிய ஒரு நகரம், மேலும் நமது சமூகத்தை பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருப்பதில் அனைவருக்கும் பங்கு உண்டு. பட்டாசுகளைப் பயன்படுத்துபவர்கள் அவற்றைப் பாதுகாப்பாகவும் சட்டப்பூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றாலும், பட்டாசு சம்பந்தமான ஒரு கெட்ட சம்பவத்தைப் பற்றி நகரத்திற்குத் தெரிவிப்பதற்கு முன்பு பட்டாசு விதிகள் குறித்து விழிப்புடன் இருப்பது சமூகத்தில் உள்ள மற்றவர்களின் பொறுப்பாகும்.

உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் நகரம் அனுமதித்த தேதிகளில், வீட்டில், அவர்களின் தனிப்பட்ட இடத்தில், அனுமதிக்கப்பட்ட நேரத்திற்குள் பட்டாசுகளைப் பயன்படுத்துகிறாரா என்பதைப் பார்க்க நகரத்தின் பட்டாசு வலைப்பக்கத்தை முதலில் பாருங்கள் - இது பட்டாசுகளின் சட்டப்பூர்வ பயன்பாட்டைக் குறிக்கிறது. பட்டாசுகளைப் பயன்படுத்துவது குறித்து உங்களுக்கு பாதுகாப்பு கவலைகள் இருந்தால், உங்கள் அண்டை வீட்டாருடன் உங்களுக்கு நல்ல உறவு இருந்தால் அவர்களிடம் பேசலாம். மாற்றாக, சட்டவிரோதமாக பட்டாசுகளைப் பயன்படுத்துவது குறித்து ஆன்லைன் படிவம் மூலமாகவோ அல்லது 311 ஐ அழைப்பதன் மூலமாகவோ நகர நிர்வாகத்திற்கு புகாரளிக்கலாம்.

**நகர துணைச் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது பின்பற்றாமை**

உங்கள் சுற்றுப்புறத்திலோ அல்லது சமூகத்திலோ யாராவது பட்டாசுகளை தவறாகப் பயன்படுத்தினால், தயவுசெய்து 311 என்ற எண்ணை அழைக்கவும். தீ, தீக்காயம் அல்லது மரணம் போன்ற அவசரநிலை ஏற்பட்டால் தவிர, பட்டாசு வெடித்தல் பற்றிய புகார்களுக்கு 911 என்ற எண்ணை அழைக்க வேண்டாம்.

*பட்டாசுகள் குறித்து குடியிருப்பாளர்கள் பின்வரும் வழிகளில் நகரத்தை தொடர்பு கொள்ளலாம்:*

- பகல் அல்லது இரவின் எந்த நேரத்திலும் ஆன்லைனில் புகாரைச் சமர்ப்பிக்கவும் அல்லது சட்டவிரோத பட்டாசு பயன்பாடு அல்லது பட்டாசுகளின் முறையற்ற விற்பனை குறித்து 311 (நகர எல்லைக்கு வெளியே என்றால் 905-615-4311) என்ற

எண்ணை அழைக்கவும். குடியிருப்பாளர்கள் புகாரைச் சமர்ப்பித்தவுடன், தேவைப்பட்டால், நகர அமலாக்கத்துறை ஊழியர்கள் செவிசாய்ப்பார்கள். இந்தச் செவிசாய்ப்பில் ஆன்சைட் விசாரணையும் அடங்கும். பட்டாசுகளை சட்டவிரோதமாகப் பயன்படுத்துவது $300 அல்லது அதற்கு மேற்பட்ட அபராதங்களுக்கு வழிவகுக்கும்.

- நகர பூங்காக்களிலோ அல்லது பள்ளி வளாகத்திலோ பட்டாசுகள் குவிக்கப்பட்டால்/வெடிக்கச்செய்தால், கட்டிடங்கள் கண்காணிப்பு திட்டத்தை 905-615-4060 என்ற எண்ணில் அழைக்கவும்.
- பட்டாசுகள் பற்றிய மற்ற அனைத்து விசாரணைகளுக்கும் Mississauga தீயணைப்பு மற்றும் அவசர சேவைகளின் **அவசரமற்ற** தொலைபேசி எண் 905-456-5700 ஐ அழைக்கவும்.

சில திட்டமிடல், புரிதல் மற்றும் விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம், Mississauga முழுவதும் வசிப்பவர்கள் பட்டாசுகளை வெடித்து அனுபவிக்கலாம், அதே நேரத்தில் பட்டாசுகளால் பாதிக்கப்படக்கூடியவர்கள் அல்லது கூசும் உணர்திறன் உள்ளவர்களுக்கு மரியாதை காட்டலாம்.

Mississauga வில் பட்டாசு பயன்பாடு பற்றிய கூடுதல் தகவலுக்கு Mississauga.ca/fireworks ஐப் பார்வையிடவும்.